MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-115)

20-11-2022 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | சுபகிருது வருடம் (கார்த்திகை 4) | வருட சந்தா ₹ 200 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 59 | இதழ் 45 பக்கம்-12
e-mail:missionpress48@gmail.com
e-mail:missionpress48@yahoo.com
Ph: 0413/ 2334360

ஆசிரியர் : பேரருள்பணி ஆ. அருளானந்தம்
துணை ஆசிரியர் : அருள்பணி L.ஆரோக்கியதாஸ்



## சமூகத்தொடர்புப் பணிகள் உண்மையுள்ளதாக இருக்க வேண்டும்

மக்களின் தனிமை உணர்வை அகற்றுதல், குரலற்றவர்களுக்கு குரல் கொடுத்தல், உண்மையை வழங்குவதற்கு ஒருவர் தன்னையே உருவாக்குதல் ஆகியவை சமூகத்தொடர்பின் மூன்று மூலைக்கற்கள்

- திருத்தந்தை பிரான்சிஸ்

நவம்பர் 12, சனிக்கிழமையன்று வத்திக்கானில், சமூகத்தொடர்பு திருப்பீடத்துறை நடத்திய ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மற்றும் அத்துறையில் பணியாற்றுவோர் என ஏறத்தாழ 200 பேரை, சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சமூகத்தொடர்புப் பணியாளர்களின் கடமைகள் குறித்து எடுத்துரைத்தார். ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த உரையை வழங்காமல் அந்நேரத்தில் தன் உள்ளத்தில் எழுந்த சிந்தனைகளைப் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை, புறக்கணிக்கப்பட்டோருக்காக குரல்கொடுத்து, அவர்களுக்கு அருகிலிருக்குமாறு ஊக்கப்படுத்தினார்.

பொதுவாக நாம் புறக்கணிக்கின்ற காரியங்கள் மீது கவனம் செலுத்தப்பட பணியாற்றுமாறும், சமூகத்தொடர்பாளர்களின் பணியில் கடவுளின் குரல் எதிரொலிக்கப்படவேண்டும் என்றும் கூறியத் திருத்தந்தை, சமூகத்தொடர்பின் மூன்று மூலைக்கற்கள் குறித்து எடுத்துரைத்தார்.

**சமூகத்தொடர்பின் மூன்று மூலைக்கற்கள்:**

❶ மக்களிலிருந்து தனிமை உணர்வை அகற்றுதல் ❷ குரலற்றவர்களுக்கு குரல் கொடுத்தல் ❸ உண்மையை வழங்குவதற்கு ஒருவர் தன்னையே உருவாக்குதல் ஆகியவை, சமூகத்தொடர்பின் மூன்று மூலைக்கற்கள். பல ஆண்களும் பெண்களும் தனிமை உணர்வை எதிர்கொள்ளும்வேளை, அவர்களிடமிருந்து இதனைக் குறைக்காவிடில், சமூகத்தொடர்பு வெறும் பொழுதுபோக்காகவே இருக்கும்.

உற்றுக்கேட்டல், சந்திப்பு, மக்களின் கதைகளைக் கூறுதல் ஆகியவற்றிலிருந்து மலர்வதே உண்மையான சமூகத்தொடர்பு. எதார்த்த வாழ்வின் ஒரு பகுதியாக இருக்கும் முறை குறித்து நாம் அறியாதிருந்தால், எவருமே கவனம் செலுத்தாத வழிகளையே சுட்டிக்காட்டுவோம். சமூகத்தொடர்பு, செவிமடுத்தலுக்கு ஆதரவாகச் செயல்படும் திருஅவைக்கும் பணியாற்றுவதாகும்.



**உலக ஆயர்கள் மாமன்றம் மற்றும் சமூகத்தொடர்பு:**

"**முன்னேற்றப்படவேண்டிய பாதை**" என்ற தலைப்பில் இக்கூட்டம் நடைபெற்றது பற்றிக் குறிப்பிட்ட திருத்தந்தை, ஒன்றிணைந்து பயணம் மேற்கொள்ளாவிடில், நாம் வெறும் திருஅவை நிறுவனமாகவே இருப்போம் என்றும், நம் ஆண்டவர் இயேசு கூறிய, "**நீங்கள் உலகின் உப்பு, உலகின் ஒளி**" என்பதற்கேற்ப வாழும் திறனை இழந்துவிடுவோம் என்று கூறியுள்ளார்.

ஆசிரியர் பேனா...

# விழிப்போடு வாழ்வோம்

**கணினி ஆதிக்கம்:** மனோவேகத்தை மிஞ்சும் அளவுக்கு வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது அறிவியல் உலகம். புதிய கண்டுபிடிப்புகள் மனித அறிவின் ஆற்றலை பறைச்சாற்றுவதாக அமைந்திருக் கின்றன. சந்தைப் பொருளாதாரத்தில் விற்கப்படும் பொருளாக மனித அறிவாற்றல் மாறிவிட்டது கணினியும், கணினி வகை சார்ந்த மின்னனுக் கருவிகளும் இன்று நம்மில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்றன.

**விழிப்பு தேவை:** எழுதுவதும் வாசிப்பதும் நம்மிடையே மறைந்து கொண்டிருக்கின்றன. விரைவான தகவல் பரிமாற்றத்திற்கு கணினி சார்ந்த மின்னனுக் கருவிகள் துணை செய்கின்றன என்பது உண்மைதான்; அவற்றினால் ஏற்படும் பாதகங்கள் எதிர்கால மனித சமுதாயத்தின் வாழ்வுக்கே அச்சுறுத்தலாக மாறிக் கொண்டிருக்கிறது. “எந்த ஒரு விஞ்ஞான கண்டு பிடிப்புமே நன்மைகளும், தீமைகளும் நிறைந்ததாகவே உள்ளது. (அதன்) வளர்ச்சியை தடுக்க முடியாது. அதனால் ஏற்படும் சில பின்விளைவுகளைத் தவிர்க்கவும் முடியாது” (தினமணி 15.11.2022, தலையங்கம்) எனவே இன்றைய சூழ-ல் நன்மை பயப்பவற்றை தேர்ந்து செயல்பட விழிப்போடு இருக்க வேண்டியது அவசியம்.

“இந்தியர்கள் தினமும் 7 மணி 19 நிமிடங்கள் இணையத்தைப் பயன்படுத்துவதாகவும் அதில் 2 மணி 30 நிமிடங்கள் சமூக ஊடகங்களில் நேரத்தை செலவழிப்பதாகவும்” தி குளோபல் ஸ்டாட்டிஸ்டிக்ஸ் என்ற நிறுவனத்தின் ஆய்வு அறிக்கை வெளிப்படுத்துகிறது. ‘‘சமூக வலைதளங்களில் இளைஞர்கள் உள்ளிட்ட பலரும் மூழ்கிக் கிடப்பது பல்வேறு விதமான சிக்கல்களை உருவாக்குகிறது என்பதை நாம் தெரிந்திருக்கிறோம்’’ (தினமணி 15.11.2022, விழிப்புணர்வுதான் தீர்வு).

**கர்ச்சிக்கு சிங்கம்:** தூய ஆவியார் வழங்கும் ஞானம், புத்தி, அறிவு, விமரிசை, திடம், பக்தி, தெய்வ பயம் என்ற கொடைகளினால் வழிநடத்தப்பட நாம் விரும்ப வேண்டும். இதுதானே மனிதரை மாக்களில் இருந்து வேறுபடுத்தும் பண்பு. “அறிவுத் தெளிவோடு விழிப்பாயிருங்கள். உங்கள் எதிரியாகிய அலகை யாரை விழுங்கலாமெனக் கர்ச்சிக்கும் சிங்கம் போலத் தேடித் திரிகிறது.’’ (1பேதுரு 5:8) என்று நாம் எச்சரிக்கப் படுகின்றோம்.

**எது விழிப்புணர்வு?:** பொருளாதார வளமையும், அறிவியல் வளர்ச்சியும் இன்று ஒருவரை சுண்டி இழுத்து தனிமைப்படுத்தி நிதானம் இழக்கச் செய்வதை உணராமல் பலர் இருந்து வருகின்றோம். நிதானம் இழக்காமல் நேர்வழி நடப்பதுதான் விழிப்புணர்வு. வள்ளுவம் விழிப்புணர்வின் தேவையை வ-யுறுத்துகின்றது.

“*எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு*” (குறள் 355).

வழுக்குகின்ற சேற்றுப் பாதையில் நடக்கும் போது விழுந்துவிடாமல் இருக்க ஊன்றுகோல் உதவும். ஒழுக்கமுடைய பெரியோரின் வார்த்தைகள் அத்தகைய ஊன்றுக்கோலாக வாழ்க்கைப் பாதையில் உதவும் என்பதை நினைவில் கொள்வோம்.

“இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்” (குறள் 415)

‘‘நல்லோரின் அறிவுரையைக் கேட்டு நடக்க வேண்டும் என்று ஔவையாரின் மூதுரையும் கூறுகின்றது.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலம் மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று’’ (வெண்பா 8).

**அரிதாகிவிட்டது உலகில்:** இன்றைய நல்லார் யார்? பொல்லார் யார்? என்று இணங்கண்டுகொள்வது கடினமாக இருக்கிறது என்று குறைபட்டுக் கொள்வதும் உண்டு. அது ஒருபுறம் இருக்க மற்றவர் சொல்லும் நல்லதை ஏற்பதே அரிதாகிவிட்டது. பெற்றோர் சொன்னாலும், சான்றுடை பெரியோர் சொன்னாலும், ஆசிரியர் சொன்னாலும் கேட்டு செயல்படும் எண்ணமும் ஆசையும் சிறார் முதல் பெரியோர் வரையும் இல்லாமல் போய்விட்டது. ஏடெடுத்து படிப்பதும் இல்லை ஏற்றவழி நடப்பதும் இல்லை. கணினியிலே கண்ணையும் கருத்தையும் கவரும் ஒன்றையே பின்பற்றும் மனநிலை வளர்ந்துவிட்டது.

**குரங்கு மனப்பாண்மை:** குரங்குக்கு வெல்லம் திண்ண ஆசை. பானையிலே கைவிட்டு ஒரு பெரிய வெல்லக் கட்டியை பிடித்தது. பானையில் இருந்து கையை எடுக்க முடியவில்லை. இந்நேரத்தில் அங்கு வந்த ஆமை வெல்லக் கட்டியை விட்டுவிட்டால் கைவெளியே வந்துவிடும் என்ற அறிவுரை சொன்னது. குரங்குக்கு கோபம் வர, மறு கையால் ஆமையை ஓங்கி அடித்தது. வ-தாங்காமல் ஆமை ஓடிவிட்டது. குரங்கு பானையில் இருந்து கையை எடுக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறது. இப்படித்தான் இன்று பல சிறாரும், இளையோரும், ஏன் சில பெரியவர்களும் கூட கணினி வலை தளங்களின் ஆபத்திலே சிக்கிக் கொண்டிருக்கின்றனர். தப்பிக்க ஒரே வழி விழிப்புணர்வே.

விழிப்போடு வாழ்வதற்கு ஒரு சிறந்த வரலாற்று பாடம். ரோமைப் பேரரசன் பொது வெளியில் வரும்போதும் ஒருவர் மன்னருக்கு முன் ஓடிக்கொண்டே பின்வரும் அறிவிப்பை செய்து கொண்டு செல்வார். “நீ ஒரு நாள் இறப்பாய் நினைவிற் கொள்” (Memento monienti).

இச்செயல் நிலையாமையை உணர்த்துவதோடும், இருக்கும்போது நல்வழி நடக்க வேண்டும் என்பதையும் மன்னருக்கு நினைவூட்டுவதற்காகவும் கருதப்பட்டது. நமக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும் அல்லவா? நல்லோர் சொல் கேட்டு விழிப்போடு வாழ்வோம்.



**27-11-2022**

# ஆண்டவர் நம்மை சந்திப்பார்



அருள்திரு. J. இருதயராஜ்
உதவி பங்குத்தந்தை, இருப்புக்குறிச்சி

எசா 2:1-5; உரோமை 13: 11-14; மத் 24:37-44

*அரசன் ஒருவன் தன் அரண்மனையின் மாடியில் நடந்து கொண்டிருந்தான். அப்பொழுது கடைவீதியில் நடந்து கொண்டிருந்த துறவியை பார்க்கின்றார். அந்த துறவி மிகவும் மகிழ்ச்சியோடிருப்பதையும் சுற்றி நடப்பதைப்பற்றி கவலைப்படாமல் இருப்பதையும் கண்ட அரசன் அந்த துறவியை சந்திக்க ஆசைப்படுகின்றார். உடனே அரசன் பணியாளர்களிடம் துறவியை உடனே சந்திக்க வேண்டும். அவரை அழைத்து வாருங்கள் என்று சொல்கின்றான். பணியாளர்கள் உடனே மேல் மாடியி-ருந்து ஒரு கயிறை கடைவீதிவரை இறக்கி கயிற்றில் துறவியை கட்டி மேலேத் தூக்குகின்றார்கள். மேலே வந்ததும் அரசன் துறவியிடம் கயிற்றில் கட்டித் தூக்கியதற்கு மன்னிப்புக் கேட்கின்றார். துறவி தன்னை பார்க்க ஆசைப்பட்டதற்கு காரணம் என்னவென்று கேட்கின்றார்.*

*அதற்கு அரசன் இவ்வாறாக பதில் சொல்கிறான்; ''உங்களை கடைவீதியில் பார்த்தவுடன் உங்களிடம் இருந்த மகிழ்ச்சி, உங்களுடைய முகப்பொ-வு, உங்களுடைய செயல்பாடுகள் பிடித்திருந்தது. அது மட்டுமல்ல நீண்ட நாள் எனக்குள் இருந்த ஆசை, கடவுளை சந்திக்க வேண்டும், என்கிற ஆசை, அதற்கான வழியை உங்களிடமிருந்து தெரிந்துகொள்ள தான் உங்களை அழைத்தேன்'' என்று சொன்னானாம்.*

*அதற்கு அந்தத் துறவி, ''இதற்கான பதில் உங்களிடமே இருக்கின்றது, அதாவது துறவியாகிய நான் உங்களை சந்திக்க வேண்டுமெனில் நிறைய பேரிடம் அனுமதி பெறவேண்டும். ஆனால் அரசனாகிய நீங்கள் என்னை சந்திப்பது எளிதாய் இருந்தது அல்லவா? அதுபோலவே நாம் கடவுளை சந்திக்க வேண்டுமெனில் நீங்கள் உங்களுடைய அன்றாட செயல்பாடுகளை சரியாக செய்வதோடுமட்டுமல்லாமல் அவரரின்றி எதுவும் இல்லை, அவர் துணையின்றி எதுவும் செய்ய முடியாது என்ற நிலையில் உங்கள் வாழ்க்கையை சீர் செய்யுங்கள். உங்களுடைய செயல்பாடுகளை பார்த்து கடவுளே உங்களை சந்திக்க வருவார். ஆனால் உங்கள் வாழ்க்கையை அவரின்றி ஒன்றும் செய்யமுடியாது என்ற நிலையில் வாழ வேண்டும் என்று சொன்னாராம்.*

**திருவருகைக் காலம்:** இறை இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே திருவருகைக் காலம் என்றாலே நம் அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சியின் காலம். ஆண்டவர் நம்மைத் தேடி வர இருக்கின்றார் என்ற மகிழ்ச்சி ஒருபுறம், புதிய ஆடைகள், குடில்கள் அமைத்தல், விடுமுறைக் கால கொண்டாட்டம், புதிய ஆண்டு பிறப்பு, என்று பலவித மகிழ்ச்சிகளை உள்ளடக்கியதுதான் இந்தக் காலம். இவையெல்லாம் நம்மை ஆண்டவர் தேடி வருகிறார் என்பதன் மகிழ்ச்சியின் வெளிப்பாடு.

**சீர்செய்வோம்:** அந்த மகிழ்ச்சி நிறைவு அடைய வேண்டுமெனில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதனைதான் இன்றைய இறைவாக்கு வழிபாடு எடுத்துரைக்கின்றது. இரவு முடியப்போகிறது, பகல் நெருங்கி உள்ளது. ஆகவே இருளின் ஆட்சிக்குரிய செயல்பாடுகளை களைந்துவிட்டு, ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலன்களை அணிந்து கொள்வோமாக (உரோமை 13.12) என்ற அழைப்புதான் திருவருகைக் காலத்தின் மையமாக இருக்கின்றது இன்றைய நாளில் இந்த வார்த்தையை மனதில் முழுமையாக இருத்தி ஆண்டவரே நம்மை கயிறு கட்டி அவருடைய அருகில் இழுக்கும்படியாக நம்முடைய செயல்பாடுகளை சீர் செய்வோமாக.

**செய்ய வேண்டியவை:** உரோமை 13.13-14

பக-ல் நடப்பதுபோல் மதிப்போடு நடத்தல்.

களியாட்டம், குடிவெறி, கூடா ஒழுக்கம், காம வெறி, சண்டைச் சச்சரவு, தவிர்க்ப்படல். தீய இச்சைகளை தூண்டும் ஊனியல்பின் நாட்டங்களுக்கு இடம் கொடாமை. இயேசு கிறிஸ்துவை அணிந்து கொள்ளுதல்.

**எப்படி சீர்படுத்துவது, செயல்படுத்துவது:** ஆண்டவரை சந்திப்பதற்கும், நம்முடைய செயல்பாடுகளை சீர்படுத்துவதற்கும் அவசியமான ஒன்று விழிப்பாய் இருக்க வேண்டும் (மத்.24.42) மற்றொன்று ஆயத்தமாய் இருக்க வேண்டும் (மத் 24.44) விழிப்பாயும், ஆயத்தமாகவும் இருக்க வேண்டில் முத-ல் நம்முடைய பலம், பலவீனம் தெரிந்திருக்க வேண்டும்.

**இன்றைய செயல்பாடுகள்:** அனைத்தும் கடவுளுக்கு பிடித்தமானதாய் இருக்க வேண்டும். அதாவது எப்படி அந்தத் துறவியின் செயல்பாடு அரசனுக்கு பிடித்து, உடனே அவரை சந்திக்க ஆசைப்பட்டதுபோல், கடவுளும் நம்முடைய செயல்பாடுகளை கண்டு உடனே நம்மைப் பார்க்க ஆசைப்பட வேண்டும். எனவே சாத்தான் நம்மை வெல்ல விடாமல் விழிப்பாய் இருக்கவேண்டும். இதனைத்தான் பேதுரு தன்னுடைய முதல் திருமுகத்தில், ''அறிவுத் தெளிவோடு விழிப்பாயிருங்கள், உங்கள் எதிரியாகிய அலகை யாரை விழுங்கலாமெனக் கர்ச்சிக்கும் சிங்கம் போலத் தேடித் திரிகிறது'' - (1பேதுரு 5.8) என்கிறார்.

அதுமட்டுமல்ல நோவாவின் காலத்தில் விழிப்போடும் ஆயத்தமாகவும் இருந்த நோவாவின் குடும்பம் போல நாமும் இருக்க வேண்டும் என கடவுள் விரும்புகின்றார். எனவேதான் பவுலடியார் இவ்வாறு குறிப்படுகின்றார். ''உங்களுடைய முந்தின நடத்தையை மாற்றி, தீய நாட்டங்களால் ஏமாந்து அழிவுறும். பழைய மனிதருக்குரிய இயல்பைக் களைந்து விடுங்கள்'' (எபே. 4.21). இப்படி நம்முடைய செயல்பாடுகள் விழிப்பாயிருந்து சீர்படுத்தப்படும்போது ஆண்டவரை சந்திப்பதற்கு எப்பொழுதும் நம்மால் ஆயத்தமாய் இருக்க முடியும்.

**நம் வாழ்வு:** நம்மை தேடி வருகின்ற ஆண்டவர் நம்மை சந்திக்க வேண்டுமெனில் நம்முடைய மனப்பாங்கு புதுப்பிக்கப்படவேண்டும். கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ள வேண்டும். (எபே. 4.24) மேலும் எசாயா இறைவாக்கினர் கூறும் வார்த்தையை உள்ளத்தில் ஏற்போம், ஆண்டவரின் மலைக்கு போவோம். கடவுளின் கோவிலுக்குப் போவோம். அவர் கற்பிக்கும் நெறிகளில் நடப்போம். ஆண்டவரின் ஒளியில் நடக்க முயற்சி செய்வோம் (எசா 2.5). அவ்வாறு வாழ்கிறபோது ஆண்டவர் நம்மை சந்திக்க வருவார்.

# இல்லறத்தில் நிறைவு கண்டவர்கள்

– திருமதி **பிலோ ஜான்,** திருநெல்வே--11.



ஒருமுறை நான் திருநெல்வே-யி-ருந்து சென்னைக்கு ரயி-ல் சென்றேன். கோவில்பட்டியில் தாயும், மகளும் ஏறி என் பக்கத்தில் அமர்ந்தார்கள். சிறிது நேரம் கழித்து நான் அவர்களிடம் “எங்கே போகிறீர்கள்?” என்றேன். சென்னைக்குத்தான். மகளை கல்லூரியில் சேர்க்கப் போகிறேன்” என்றாள். பல காரியங்களைப் பேசிவிட்டு “அப்படியானால் நீங்கள் எங்கே வேலை செய்கிறீர்கள்?” என்றேன். தயக்கமாக “நான் உண்மையான வேலையைச் சொன்னால் நீங்கள் என் அருகில் அமர்ந்து பேசமாட்டீர்கள். அதனால் நான் மற்றவர்களிடம் சொல்வது போல் தீப்பெட்டி கம்பெனியில் வேலைப் பார்க்கிறேன் என்றுதான் சொல்வேன்” என்றாள். “சும்மா சொல்லுங்கள், நான் ஒன்றும் நினைக்க மாட்டேன்” என்றேன். “நான் வெட்டியான் வேலை செய்கிறேன்” என்றாள். எனக்கு புரியவில்லை. “அப்படியென்றால்” என்றேன். “இறந்தவர்களை சுடுகாட்டில் எரிக்கும் வேலை” என்றாள். “அதை ஆண்கள் தானே செய்வார்கள். நீ எப்படி என்றேன்.” “என் கணவர்தான் அந்த வேலைச் செய்தார். அவர் இறந்தபின் வேறு ஆட்கள் இல்லை. எனக்கும் வேறுவேலை கிடைக்கவில்லை. அதனால் இந்த வேலையைச் செய்கிறேன்.”



“இரவில் பேய் நடமாடும் என்பார்கள். உங்களுக்கு பயமாக இருக்காதா? தனிமையாக எப்படி இருப்பீர்கள்?” முத-ல் எனக்கு அச்சமாகத்தான் இருந்தது. அதன் பின் பழகிபோனது. பேய் நடமாடாது, இறந்தவர்களின் ஆன்மா தான் அழும் என்றாள். என்னுள் ஓர் ஆர்வம் எழ “நடந்த ஒன்றைச் சொல்லுங்களேன்” என்றேன்.

“ஒருமுறை கணவன் இறந்துவிட மனைவி ‘ஐயா’ என்று அழுது கீழே விழுந்திருக்கிறாள், அவளும் இறந்து போக அவர்களின் பிள்ளைகள் இரண்டு பேரையும் ஒன்றாக சுடுகாட்டிற்கு எடுத்து வந்தனர். நான் தனி தனியாகத்தான் எரிப்பேன் என்றேன். “எங்கள் பெற்றோர் ஒரே நாளில் இறந்துவிட்டார்கள். சாவிலும் பிரியாத அவர்களை ஒன்றாகவே எரியூட்டுங்கள்” என்றார்கள். நான் அது கடினம் என்று சொல்-யும் அவர்கள் என்னை கட்டாயப்படுத்தி இருவரையும் ஒன்றாக வைத்துவிடச் சொன்னார்கள். அவர்கள் விரும்புவது போன்று இரண்டு பேரையும் ஒன்றாக வைத்து நெருப்பூட்டினேன். சிறிது நேரம் கழித்து இந்த அம்மாவின் உடல் எழும்பியது, அடுத்து அவரின் இடக்கை நீண்டு அவளை அணைத்தது. இதைப் பார்த்து சிறிது நேரம் வியந்து போனேன். எலும்பு எழும் போதெல்லாம் நான் கம்பி கொண்டு அடித்து கீழே விழவைப்பேன்.

எனக்கு அதிசயமாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. பார்த்துக் கொண்டே இருந்தேன். சிறிது நேரம் கழித்து என் வேலையைச் செய்தேன். அதுதான் கம்பி கொண்டு ஓங்கி அடித்தேன். அந்த கை எலும்பு மேலே அந்த அம்மா விழுந்தார்கள், எரியூட்டினேன். மறுநாள் இருவர் சாம்பலையும் ஒன்றாக எடுத்து அவர்கள் பிள்ளைகளிடம் கொடுத்தேன். நடந்த சம்பவத்தையும் கூறினேன், அழுதார்கள். “இருவர் அஸ்தியையும் ஒன்றாக தாமிரபரணி ஆற்றில் பூஜை செய்து கரைக்கனும்” என்றார்கள்.

சாவிலும் இணைந்த இவர்களின் இல்லற வாழ்க்கை எப்படி இருந்திருக்கும், ஆச்சரியமாக இருந்தது. வாழ்வு எப்படியோ சாவு அப்படியே என்பார்கள். அது உண்மைதான். நாம் எப்படி வாழ்கிறோம் என எண்ணிப் பார்ப்போம்.


## 2023 ஆம் ஆண்டிற்கான விவி-ய அருள்வாக்கு கையேடு

விற்பனையில்

தமிழ் கையேடு - விலை 160.00

ஆங்கில கையேடு - விலை 200.00

மிஷன் அச்சகம்
196, மாதா கோவில் வீதி,
புதுச்சேரி - 605 001.
0413-2334360

தபால் செலவு தனி

## 2023 ஆம் ஆண்டிற்கான காலண்டர் தேவைப்படுவோர் முன்பதிவு செய்யவும்

சாதாரன படம் - விலை 15.00

விற்பனையில்

பஞ்சாங்கம் - விலை 35.00

மிஷன் அச்சகம்
196, மாதா கோவில் வீதி,
புதுச்சேரி - 605 001. 0413-2334360

தபால் செலவு தனி

# பாவமா? அது என்ன?



– திரு A. யூஜின்
காரைக்கால்

“என்ன சார் இப்படி பேசுகின்றீர்கள். இதெல்லாம் பாவமில்லை. முத-ல் புரிந்து கொள்ளுங்கள். அதெல்லாம் இன்றைய சூழ-ன் வாழ்க்கை முறை மாற்றம். ஈரண்டாயிரம் ஆண்டுகள் முன்பிருந்த வாழ்க்கை முறைவேறு இன்றைய வாழ்க்கை முறை வேறு. அன்றைய சட்டங்கள் வேறு இன்றைய சட்டங்கள் வேறு. நீங்கள் சொல்வது போல வாழ முயன்றால் யாராலும் நிம்மதியாக வாழ முடியாது. நாம் நன்றாக வாழ வேண்டுமென்றால் இன்றைய சூழலுக்கேற்ப நாம் நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.



சார் நீங்கள் கட்டளைபடிதான் வாழ்கிறீர்கள், கொலை செய்யவில்லை கண்டிப்பாக விபச்சாரம் செய்யவில்லை. ஞாயிறு திருப்ப-யில் பங்கேற்கிறீர்கள். சில நேரங்களில் நாலு பேருக்கு உதவிகள் செய்கின்றீர்கள். பிறகு என்ன?

இங்கே பாருங்க சார், திருவள்ளுவர் கூட “பொய்மையும் வாய்மை இடத்தே” என்று சொல்கிறார். நாலு பேருக்கு நல்லது நடக்கிறது என்றால் அப்படி இப்படி இருப்பது தப்பில்லை என்பதுதான் அதன் பொருள் என்றார் அவர்.

“கடவுளுக்கு இதெல்லாம் பிடிக்குமா?” நான் கேட்டேன்.

ஏன் சார் உங்களுக்குத் தெரியாதா? இயேசு ஆண்டவர் கூட, “நீங்கள் பாம்புகளைப் போல முன் மதி உடையவர்களாய் இருங்கள்” (மத் 10.16) என்று கூறவில்லையா? என்றார்.

நான் திடுக்கிட்டேன், “ஏன் சார் அதற்கு இப்படியா பொருள் கொள்வது?” என்றேன். அவர் பதில் கூறாமல் எழுந்து சென்று விட்டார்.

இதுதான் இன்றைய உண்மை நிலை. எல்லா உண்மைகளையும் ஒவ்வொருவரும் தனக்கேற்றது போல் மாற்றிக் கொண்டு வாழ ஆரம்பித்துவிட்டனர். தனக்கு பயன்படுகிறது என்றால் எதுவும் பாவமில்லை என்று பொதுவான மனநிலைக்கு மக்கள் வந்துவிட்டனர். இடுக்கமான பாதை வழியே வாருங்கள் என்ற ஆண்டவரின் அழைப்பை மறந்துவிட்டு அகலமான பாதையில் அழிவை நோக்கி அழகாக நடக்க ஆரம்பித்து விட்டனர். நமது நூற்றாண்டின் மிகப்பெரிய பாவம், “பாவம் எதுவும் பாவமில்லை” என்ற மன உணர்வுதான் என்று நம் முன்னாள் திருத்தந்தை புனித இரண்டாம் அருள் சின்னப்பர் கூறுகிறார்.

நான் செல்லும் பாதை அகலமானது இரண்டு பக்கங்களிலும் கண்களை குருடாக்கும் அளவு பிரகாசமான வெளிச்சக் காரணிகள் உண்டு என்பதையும் முத-ல் நான் புரிந்து கொள்ள வேண்டும். இந்த செயற்கை வெளிச்சக்கற்றைகள் என்றுமே உள்மன ஆழத்தின் இருளை அகற்ற முடியாது என்பதையும் நாம் உணர வேண்டும். என் மனதின் இருள் அகலாமல் என் மனதின் குரலை என்னால் கேட்க முடியாது என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

போதிக்கும் பொறுப்பில் இருப்பவர்கள் எனக்கே ஏழாயிரம் பிரச்சனைகள், இதில் ஏன் புதுப்புது பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டும் என்று அமைதியாகி விட்டார்கள். கூகுள், பேஸ்புக், யூடியூப் இவற்றை புது நற்செய்தியாக ஏற்றுக்கொண்டு விட்டார்கள்.

முன்னோடியாக வாழ்ந்து காட்ட வேண்டிய பெற்றோர்கள், எனக்கிருப்பதோ ஒரே ஒரு குழந்தை அதன் மனதை ஏன் புண்படுத்த வேண்டும் என்று அது பிறந்த மருத்துவமனை கட்டி-லேயே அதற்கு முடிசூட்டிவிட்டு அதன் அடிமைகளாகிவிட்டார்கள்.

பாவம் பற்றிய இந்த சிந்தனையோட்டத்தில் இரண்டு கருத்துத் துளிகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

உலகில் மிக ஆபத்தானவை என கருதப்படும் உயிர்க் கொல்- விலங்குகள் பல உள்ளன. ஆண்டுதோறும் அவை ஏற்படுத்தும் ஒட்டு மொத்த மனித இனத்தின் மரணங்களை விட, நாம் அவ்வளவாக பொருட்படுத்தாத கொசுக்கள் ஏற்படுத்தும் நோய்களும் உயிரிழப்புகளும் உண்மையில் மிக அதிகம். அது போல மிகப் பெரும் பாவங்கள் ஏற்படுத்தும் ஆன்மா இழப்புகளைவிட, நமது சிறு சிறு பாவங்கள் மிகப்பெரிய அளவில் நம்மை கடவுளிடமிருந்து எளிதில் பிரித்துவிடுகின்றன; மனிதரிடம் இருந்து பிரித்துவிடுகின்றன.

மேலும் என்னைச் சுற்றி இருக்கும் பலரைப் போல நான் அவ்வளவு பெரிய பாவியல்ல என்ற மனநிலையில் பலர் வாழ்கின்றனர், இம்மனநிலையில் மாற்றம் வேண்டும்.

விழிப்பாயிருப்போம்! ஏனெனில் என் தீர்ப்பு, என் செயல் மற்றும் சிந்தனைகளைப் பொருத்தே அமையும்.



# வசந்தமாய் வாழ்வு

-அருள்பணி. **M. ஜான் கென்னடி,**
முதல்வர் பொறுப்பு, புனித அந்தோணியார் பள்ளி, நெய்வேலி.

## 93. நிலையாமை

நிலையாமையாவது 'தான்' என்று நினைத்திருக்கின்ற உடம்பும், 'தனது' என்று நினைத்திருக்கின்ற செல்வமும் நிலை நில்லாமையைக் கூறுவது. நிலையாமை என்ற சொல், உடலைவிட்டு உயிர் பிரிந்தபின் ஆன்மாவுக்குத் துணையாக வராத உலக வாழ்விற்கு மனிதனுக்குத் துணைநின்ற பொருள்களை குறிப்பிடுவதாகவும் பொருள் கொள்ளலாம். யாக்கை, இளமை, செல்வம் முதலானவற்றின் நிலையாமை பற்றிய உணர்வு ஒருவரது வாழ்வைப் பயனுடையதாக்கும். எனவேதான் மணிமேகலை, "*இளமையும் நில்லா யாக்கையும் நில்லா, வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா*" என்கிறது. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையேயான ஒரு சிறியப் பயணம்தான் இவ்வாழ்க்கை. இவ்வுலகமோ நாம் சற்று நேரம் தங்கிச் செல்லும் சத்திரம் போன்றது.

***நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்***
***பெருமை உடைத்திவ் வுலகு. - குறள் 336***

'நேற்று இருந்த ஒருவன், இன்று இல்லை என்னும் நிலையாமையாகிய பெருமையை உடையதுதான் இந்த உலகம் ஆகும்' என்கிறார் வள்ளுவர்.

**மகாவீரர் தனது 72 வது வயதில்** மரணப் படுக்கையில் இருந்தார். அவரது உடலில் மூச்சு சன்னமாக ஓடிக்கொண்டிருந்தது. அமாவாசை இரவில், உடலில் ஒரு கோவணம்கூட இல்லாமல் கரடுமுரடான பாறையில் படுத்துக்கிடந்தவரைச் சுற்றி சீடர்கள் கனத்த மனதுடன் நின்றனர். அவர்கள் அவரிடம், "பகவானே! இரண்டு நாளாக நீங்கள் உணவு எடுத்துக்கொள்ளவில்லை. உணவாக வேண்டாம்... மருந்தாக நினைத்துப் பழமும் தண்ணீரும் அருந்துங்கள். நீங்கள் படும் வேதனையை எங்களால் தாங்க முடியவில்லை!" என இறைஞ்சினார்கள். "இந்த வேதனை என்னுடையது அல்ல. ஏன், எதுவுமே என்னுடையது அல்ல" என்று சொல்லிக் கண்களை இறுதியாக மூடிக்கொண்டார் மகாவீரர். நிலையாத இந்த உடம்பின் மீதுதான் நமக்கு எவ்வளவு மோகம், எவ்வளவு வருணனைகள்.

***நீர்மேற் குமிழியிக் காயம் இது***
***நில்லாது போய்விடும் நீயறிமாயம்***

என்ற கடுவெளிசித்தரின் பாடல் உடலின் தன்மை நீர்மேல் தோன்றும் குமிழி போன்று நில்லாமல் போய்விடும் என்கிறது.

***விட்டுவிடப் போகுதுயிர், விட்ட வுடனே உடலைச்***
***சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார்...***
***ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்***
***பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு...***

என்ற பாடல் வரிகளில், 'உடலைவிட்டு உயிர் நீங்கியதும், உயிருடன் இருந்தபோது உடலுக்கு வைத்த பெயர் கூட நிலையாது, அவ்வுடல் பிணம் என்ற பெயரைப் பெறும், சுற்றத்தார் அதனை சுடுகாட்டில் எரித்திடுவர்' என்கிறார் பட்டினத்தார். "இந்த உயிர் இறைவன் கொடுத்த கடன். இந்த உடல் இலவசமாகக் கொடுத்த பரிசு. தலை வழுக்கை விழுவதோ, ரோமம் நரைப்பதோ, பல் விழுவதோ இறைவன் நமக்குப் போடும் ஞாபகக் கடிதம். 'நீ கையெழுத்துப் போட்ட பத்திரம் காலாவதியாகிப் போகிறது. கடனைக் கட்டுவதற்குத் தயாராகிக் கொள். உன் உயிரை நான் ஜப்தி செய்யப் போகிறேன்' என்று இறைவன் நம்மை எச்சரிக்கிறான்" என்கிறார் கவிஞர் கண்ணதாசன்.

**குருநானக் ஒரு ஊருக்குச் சென்றிருந்தபோது,** அவ்வூரின் மிகப் பெரிய பணக்காரர் ஒருவர் அவரை தன் வீட்டுக்கு விருந்துக்கு அழைத்தார். அப்போது தனது சொத்தின் மதிப்பையும், மாளிகையின் வனப்பையும் வாய் ஓயாமல் வருணித்த செல்வந்தருக்குப் பாடம் புகட்ட எண்ணினார் குருநானக். "உங்களால் எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா?" என்றார் நானக். மகான் தன்னிடம் உதவி கேட்கின்றாரே என்ற உவகையில், "எந்த உதவியையும் செய்யத் தயார்!" என்று வாக்களித்தார் செல்வந்தர். உடனே குருநானக் ஊசி ஒன்றைத் தேடியெடுத்து, "இதை பாதுகாத்து வைத்திருந்து, இறப்புக்குப் பின்னால் விண்ணுலகில் இருவரும் சந்திக்கும்போது மறவாமல் என்னிடம் திருப்பித் தாருங்கள்" என்றார். செல்வந்தரோ, "செத்த பின் ஊசியை எப்படிச் சுமந்து வர முடியும்?" என்று கேட்டார். "ஊசியையே கொண்டு செல்ல முடியாத நீங்கள் இவ்வளவு சொத்து சேர்த்து என்ன செய்யப் போகிறீர்கள்?" என்றார் குருநானக்.

"காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே" என்றார்கள். உலகில் வாழும் அனைவரும் மறவாமல் மனதில் இருத்த வேண்டிய செய்தி இதுதான்... உலகப் பொருட்கள், உறவுகள் அனைத்துமே நம்மோடு நிரந்தரமாக உடன் வரப்போவதில்லை. அதனால், எதன் மீதும் அதீத ஆசையோ, ஆழ்ந்த பற்றோ வைப்பதில் அர்த்தமில்லை. இதையே வள்ளுவர்,

***நில்லாத வற்றை நிலையின என்றுணரும்***
***புல்லறி வாண்மை கடை***

'நிலைத்து நில்லாத பொருள்களை எல்லாம் நிலையானவை என்று எண்ணி மயங்குகின்ற இழிவான அறிவுடைமை மிகவும் தாழ்ந்ததாகும்' என்கிறார். பெருந்தலைச் சாத்தனார், புறனானூற்றுப் பாடலில்,

*மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்*
*தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே*

'நிலையில்லா இவ்வுலகத்தில் நிலையான புகழை நிறுவ வேண்டும் என்றால் நிலையான பணிகளைச் செய்துவிட்டுதான் ஒருவர் மறைய வேண்டும்' என்கிறார். மனதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் நல்லறங்களை ஆற்ற வேண்டும் என்பதற்கே நிலையாமைத் தத்துவம் வலியுத்தப்படுகிறது.

**- வசந்தம் வீசும்**



## 11 ஒரு குரு தன் சகோதர குருக்களுக்கு...

### அருட்பணி பியர் கையே MEP

ME தமிழாக்கம் **Dr.Sr.M.லில்லி மரி** ME, புதுச்சேரி.

கலிலேயாவை நோக்கி வந்துகொண்டிருந்த இயேசுவைச் சந்திக்க பாதையோரத்தில் காத்திருந்த பார்வையற்றோர், தொழுநோயாளியைப் போன்ற நிலையில் இருங்கள். அவர்கள் தங்களுடைய நிலையை உணர்ந்திருந்தார்கள், நலமடைய ஆவலாக இருந்தார்கள். எனவேதான் அவர்களிடம் தெய்வீக மருத்துவரின் கவனத்தை ஈர்ப்பது ஒன்றையே நினைத்தார்கள், ஆசைப்பட்டார்கள். எனவே உரத்த குரலில் மீண்டும் மீண்டும் அழைத்தார்கள். இயேசுவே, தாவீதின் மகனே எங்கள் மீது இரங்கும் என்று வேண்டினார்கள்.

உங்களுடைய ஆன்மாக்களும் நோயுற்றிருக்கின்றன. பார்வையற்றும் முடக்குவாதமுற்றும் இருக்கின்றன. பாவம் என்னும் தொழுநோயால் மூடப்பட்டுள்ளன.

இயேசு உங்களிடையே வருவார். உங்கள் ஒவ்வொருவர் முன்னும் நிற்பார். அவருடைய கைகளை உங்கள் தோள்கள் மேல் வைப்பார். இரக்கமும் அன்பும் நிறைந்த பார்வையை உங்கள் மீது செலுத்திச் சொல்கிறார்: “என் குழந்தாய் நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? “அவரிடம் உங்கள் ஆன்மாவைக் காட்டுங்கள். உங்களுடைய நோயைக் காட்டுங்கள். உங்களைப் பளுவாக கீழே இழுக்கும் சங்கிலியைக் காட்டுங்கள். உங்களைக் குணமாக்கக் கெஞ்சி மன்றாடுங்கள். « நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? »

நாம் உண்மையாகவே நம்மைத் திருத்திக்கொள்ளவும் புனிதராகவும் விரும்புகிறோமா? அவர் இதற்காக நமக்குச் செய்யாதது என்ன? இந்த வினாக்களில் எல்லாம் வருந்தக் கூடியது என்னவென்றால் நடைமுறையில் நமக்கு அப்படி ஓர் ஆசை இருந்ததில்லை. மாறாக, நாம் நம்முடைய குற்றங்குறைகளை விரும்புகிறோம். அவற்றை விலக்க நாம் அக்கறை கொள்வதில்லை. மாறாக நல்லவர்களாக மாறுவதற்கு நமக்குப் பயம். இயேசு தம்மைப் பின்பற்றும்படி நம்மைக் கேட்கிறார். அவருக்கு நம்மை முழுமையாகக் கையளிக்கக் கேட்கிறார். நாமோ தயங்குகிறோம். அவர் நம்மை வெகு தொலைவுக்குக் கொண்டு சென்றுவிடுவாரோ என்ற பயம். நாளையும் இதுவே நமது கூக்குரலாக இருக்கும். அதன் பிறகு என்ன நடக்குமோ என்று வியக்கிறோம். இயேசு நம்மை எப்படியாவது போங்கள் என்று விட்டுவிட்டு ஏறெடுத்துக் கூடப் பாராமல் சென்றுவிடுவாரோ! உண்மையாகவே நாம் சிறந்தவர்களாக விரும்புகிறோமா? ஆம் என்றால் கடவுள் நிச்சயமாக நமது ஆவலை நிறைவேற்றுவார்.

அடுத்ததாகத் தேவைப்படுவது என்னவென்றால் நல்லதொரு தியானம் செய்ய செபிக்க வேண்டும். நன்றாகச் செபிக்க வேண்டும். நீண்ட நேரம் செபிக்க வேண்டும். தொடர்ந்து செபிக்க வேண்டும். கடவுளின் அருளின்றி நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. அருள் என்பது வழக்கமாகத் தியானத்தின் பலனாகக் கிடைப்பது. என்னையன்றி உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. நான் ஈர்க்காமல் எவரும் என்னிடம் வருவதில்லை. எனவே செபியுங்கள், உங்கள் இதயத்தோடும் ஆன்மாவோடும் செபியுங்கள். உங்களைப் படைத்த தந்தையிடம் செபியுங்கள். தன் குழந்தைக்கு அவர் எதை மறுக்கக் கூடும்? மகனிடம் செபியுங்கள். அவர் உங்களை மீட்டவர். உங்களைத் தன் மறு உருவான குருவாக இருக்க அழைத்தவர். தன் குருவுக்கு அவர் எதை மறுப்பார்? தூய ஆவியாரிடம் இந்த நாட்களில் அவர் உங்களளோடு இருக்கும்படி செபியுங்கள். கேளுங்கள் கொடுக்கப்படும். தேடுங்கள் கண்டடைவீர்கள். தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்.



கன்னி மரியாவிடம் செபியுங்கள். அவர் உங்களுடைய வானக அன்னை. தன்னுடைய தெய்வ மகனிடம் இருந்து உங்களுக்குத் தேவையான அருள் அனைத்தையும் பெற்றுத் தரும்படிக் கேளுங்கள்.

உங்களுடைய காவல் தூதர்களிடமும் உங்களுடைய பாதுகாவலரான புனிதரிடமும் செபியுங்கள். நமது மாதிரியான புனித பிரான்சிஸ் சவேரியாரிடம் செபியுங்கள். பின்னர் உள்ளத்தை அமைதியில் நிறுத்துங்கள். உங்கள் ‘பங்கை’, உங்கள் பணிகளை, உங்கள் சொந்த வேலைகளை, உங்கள் பிரச்சினைகளை மற்ற எல்லாவற்றையும் மறந்துவிடுங்கள். முன்னேற்றத்துக்கும் புனிதத்துக்கும் ஆனவற்றில் மட்டும் உங்களை முழுமையாகக் கையளியுங்கள். தொடர்ந்து இறைப்பிரசன்னத்தில் இருங்கள். பெத்தானியா மரியாவைப் பின்பற்றுங்கள். அவர் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவின் பாதத்தில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தார். உங்களுடைய உள் மனதுக்குச் செவிகொடுங்கள். அதன் தூண்டுதலைப் பின்பற்றுங்கள். நீங்கள் மார்த்தாவின் வேலையைச் செய்து கொண்டிருந்தீர்கள். இப்போது மரியாவின் இடத்தை எடுத்துக்கொள்ளுங்கள்.

இறுதியாக நான் சொன்னதையும் நீங்கள் வாசித்ததையும் சிந்தித்து தியானியுங்கள்.

உங்கள் ஆன்ம சோதனையை நன்கு செய்யுங்கள். உங்கள் மனச்சான்றின் அறைகள் ஒவ்வொன்றையும் திறங்கள். உங்களுடைய இழுப்பறைகள் ஒவ்வொன்றையும் இழுத்து அவற்றில் உள்ளவற்றைப் பார்வைக்கு வையுங்கள். எதுவும் இருளில் மறைந்திருத்தலாகாது. எல்லாவற்றையும் நற்செய்தியின் ஒளியிலும் கடவுளின் பார்வையிலும் வையுங்கள். சரியோ தவறோ எதுவானாலும் நீங்கள் இருப்பதுபோல உங்களைக் காணுங்கள். எப்படிக் கடவுள் முன் நிற்கிறீர்கள் என்று பாருங்கள். உங்கள் உள்ளத்தில் ஏதாவது நஞ்சான செடியைக் கண்டால் தயங்காதீர்கள். முழுமையாக வேரோடு பிடுங்கி எறியுங்கள். இயேசு உங்களுக்கு ஆசி வழங்கி உதவுவார்.

அன்பான தந்தையரே, இன்று மாலை நான் உங்களிடம் பேசும்போது உங்கள் மத்தியில் இருந்த யாக்கோபு கண்ட ஏணி எழும்புவதைக் கற்பனை செய்கிறேன். எண்ணற்ற வானதூதர்கள் இறங்குகிறார்கள். ஏராளமான அருள் வரங்களைச் சுமந்து வருகிறார்கள். அவை உங்களுக்காக. வானகத் தந்தை குனிந்து அவற்றைப் பார்க்கிறார். உங்களையும் பார்க்கிறார். அந்த ஏணியில் ஏறி தன்னிடம் வர உங்களை அழைக்கிறார்.

உண்மையாகவே இது கடவுளின் வீடு. வானகத்தின் வாசல். இது கடவுளின் வீடு. வானகத்தி வாசல். இன்று மீட்பின் நாள். இது உங்களுடைய புனிதத்துக்கான கடவுளின் விருப்பம்.

- தொடரும்



# நற்செய்திப் பணி

- திரு. அல்போன்ஸ் மோசஸ்
புதுச்சேரி-9.

**மி**ஷன் ஞாயிறு என்றால் உண்டியில் காணிக்கைப் போடுவது அல்லது கேளிக்கை, விளையாட்டுகள், ஏலம், (மாதா புடவை) மதியம் பிரியாணிவாங்கிச் சாப்பிடுவது போன்ற செயல்பாடுகள் மட்டும்தான் என்று எண்ணி அன்றோடு நம் நற்செய்திப் பணிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு அன்றாட வேலைகளில் மூழ்கிப்போய் விடுகின்றோம். ஆனால் இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பது அதுவல்ல.

நமது ஒவ்வொரு செயல்பாட்டிலும் நாம் கிறிஸ்து அவன், கிறிஸ்து அவள் என்று வாழவேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்.

ஒரு விவசாயி தன் விவசாயத் தொழிலோடு சேர்ந்து கூடை நிறைய காய்கறிகளைத் தன் தோட்டத்திலிருந்துப் பரித்து தன் பணியாளர் மூலமாக ஏழைகளுக்குத் தினமும் கொடுத்து வந்தார்.

அதைப் பார்த்த நான் இந்தக் காலத்திலும் இப்பேர்ப்பட்ட ஆளா என்று வியந்து "ஐயா ஏன் இவ்வாறு தொடர்ந்து உதவி செய்து வருகின்றீர்கள்?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், "நான் எங்கே மற்றவர்களுக்கு உதவி செய்கின்றேன். நான் கடவுளுக்கு அல்லவா கடன் கொடுக்கின்றேன். அதனால்தான் அவர் தொடர்ந்து எனக்குத் திரும்பத் தந்துகொண்டே இருக்கின்றார்.

எல்லாரும் என்னிடம் வந்து எனக்குக் கஷ்டமாக இருக்கின்றது. எனக்கு உதவுங்கள் என்று கேட்கின்றனர். என்னிடம் தருவதற்கு அதிகமாக எதுவும் இல்லை. இருந்தபோதிலும் என்னிடம் இருப்பதிலிருந்து என்னால் முடிந்த உதவிகளைத் தொடர்ந்து செய்து வருகின்றேன். கடவுளும் என் தேவைக்கு ஏற்றவாறு எனக்குக் கொடுத்துக்கொண்டே இருக்கின்றார்" என்றார்.

''அதனால் யார் கேட்டாலும் இல்லை என்றுச் சொல்வதில்லை. யோசிக்காமல் தயங்காமல் தந்துவிடுகின்றேன். ஏனெனில் என்னிடம் உள்ளபொருட்கள் அனைத்தையும் தந்துவிட்டாலும் கடவுள் என்னை கைவிடமாட்டார் என்று நிச்சயமாக நான் நம்புகிறேன்" என்றார்.

மேலும் இது ஒரு வங்கிப் பரிவர்த்தனை போன்றது. கடவுளின் வங்கியில் எப்போதும் ஏமாற்றமே இருக்காது. நாம் போடும் நற்செயல்கள் என்ற முதலுக்கு வட்டியாக நமக்குத் திரும்பத் தந்துகொண்டேயிருப்பார்.

***ஏழைக்கு இரங்கி உதவிச் செய்கின்றவர் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கின்றார். அவர் கொடுத்ததை ஆண்டவரே திரும்பித் தந்துவிடுவார் என்று நீதிமொழிகள் 19:17 கூறுகின்றது.***

***மேலும் கொடுங்கள் அப்போது உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிக் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கின்றீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும் லூக் 6:38 என்றார்.***

தினமும் நம்மால் முடிந்த நற்காரியங்களைச் செய்வதே ஒரு சிறந்த நற்செய்திப்பணி என்பது எனக்குப் புரிய ஆரம்பித்தது.



# சாந்தசீலன்!

திரு. ஜெயராஜ் தானியேல்.
முத்தியால்பேட்டை, புதுவை-3



**க**னகாபுரி பேரரசை ஆண்டு கொண்டிருந்த பராக்கிரமசாலியான மாமன்னர் நலந்தரு நற்றவநாத மறையோனுக்கு ஒரு மகள் இருந்தாள். அண்டை நாடான கோலாகலபுரியை ஆட்சி செய்து கொண்டிருந்த கலைவல்லவன் என்ற அரசன் அவளை மணமுடிக்க விரும்பி பேரரசரிடம் தூது அனுப்பினான். ஆனால், பேரரசர் அவளை ஒரு நேர்மையான நற்குணமுள்ள மனிதனுக்கே திருமணம் செய்து வைக்க விரும்பினார். நேர்மையும் ஒழுக்கமும் உள்ள ஒருவரைத் தேர்ந்தெடுப்பது எப்படி? ஒரு திட்டம் தீட்டினார் மாமன்னர். மணமகனைத் தேர்ந்தெடுக்கப் போவது குறித்து எவரிடமும் ஒன்றும் சொல்லாமல் கலைவல்லவனையும், தன் குடையின் கீழ் ஆட்சி புரிந்த சிற்றரசர்களையும், குறுநில மன்னர்களையும் ஒரு குறிப்பிட்ட நாளில் விருந்துக்கு அழைத்தார். அவையினர் கூடி வந்திருந்த விருந்தாளி களுடன் தடபுடலான விருந்தை உண்டு மகிழ்ந்திருந்தார்கள்.

மறுநாள் அவை கூடியதும், பேரரசரின் அழைப்பை ஏற்று வந்தவர்கள் வியந்தார்கள். ஏனெனில் அரசவை அரண்மனைக்கு வெளியே ஒரு திடலில் அமைக்கப்பட்டிருந்தது. மாமன்னர் விருந்தாளிகளை நோக்கி, "இப்பொழுது நீங்கள் என் அரண்மனைக்குள் நுழைந்து உங்களுக்குத் தேவையானதை எடுத்துச் செல்லலாம்" என்று அறிவித்தார். அவ்வளவு தான்! உடனே விருந்துக்கு வந்திருந்த கலைவல்லவனும், குறுநில மன்னர்களும் சிற்றரசர்களும் அரண்மனைக்குள் புகுந்து அங்கே இருந்த வைரம், வைடூரியம், கோமேதகம், ரத்தினம் மற்றும் மரகதம் போன்ற மதிப்புமிக்க கற்கள், விலையுயர்ந்த பொருட்கள், அணிகலன்கள், தங்கத்தினாலான ஆடைகள், ஆபரணங்கள், எல்லாவற்றையும் எடுத்துச் சென்றார்கள். சிறிது நேரத்தில் அரண்மனை காலியாகிவிட்டது. விருந்தாளிகள் எவரையும் காணவில்லை.

ஆனால், சிற்றரசர்களில் ஒருவனான சாந்தசீலன் மட்டும் மாமன்னரின் அருகிலேயே அமர்ந்து கொண்டிருந்தான். மாமன்னர் அவனிடம், "நீர் போகவில்லையா? உமக்கு ஒன்றும் தேவையில்லையா?" என்று கேட்டார். அதற்கு அவன் மாமன்னரை வணங்கி, "பார் போற்றும் அரசே! என்னுடைய தேவைகளை இறைவன் அறிவார். அவர் எனக்காக நிச்சயித்ததை எவராலும் தடுக்க முடியாது. பொன், பொருள், வெள்ளி எல்லாம் அழியக்கூடியவை. "அனைத்திற்கும் மேலாக இறைவனுக்கு ஏற்புடையவற்றை நாடுங்கள். அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும் (மத்தேயு 6:33) என்று திருவிவிலியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது'' என்றான். பேரரசர் அவனை ஆரத்தழுவி, ''உன் நேர்மையை மெச்சுகிறேன். அழியக்கூடியவைகளின் மீது ஆசை வைக்காமல், அழியாத நல்ல பங்கைத் தேர்ந்து கொண்டாய் (லூக்கா 10:42). இனி நீ தான் என் மகளுக்கேற்ற மணாளன், என் மகளைத் தயங்காமல் உன் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்'' என்று சொல்லி அவனுக்குத் தன் மகளை மணமுடித்து வைத்தார். திருமணம் முடிந்ததும் ''திறமைவாய்ந்த மனத்திடமுள்ள உம் மகள் பவளத்தை விடப் பெருமதிப்புள்ளவள்" (நீதிமொழிகள் 31:10) என்று மன்னரிடம் கூறி ஆண்டவருக்கு நன்றி செலுத்தினான் சாந்தசீலன்.

## விண்ணக பிறப்பின்
## 10-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



# தெரேசா முத்தப்பா

**தோற்றம்: 09-02-1918**
**மறைவு: 21-11-2012**

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்." – யோவா 11:25

செபம்

இரக்கமுள்ள இயேசுவே! எங்கள் வாழ்வில் ஒளியாய் திகழ்ந்து, எங்களை அன்போடு நேசித்து, இறை விசுவாசத்தில் நடத்தி சென்று இவ்வுலக வாழ்வில் இருந்து உம்மால் அன்போடு தேர்ந்தெடுக்கப்பட்ட உம் அன்பு அடியாராகிய

**தெரேசா முத்தப்பா**

அவர்களின் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லாத பிரகாசத்தையும் அளித்தருளும் ஆண்டவரே - ஆமென். கர்.மங்.திரி.

**திருப்பலி:** 21-11-2022 திங்கள் காலை 6.00 மணிக்கு புதுச்சேரி புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயத்திலும் மதியம் 12.00 மணிக்கு பசிலிக்காவிலும், மாலை 6.00 மணிக்கு உப்பளம், புனித சவேரியார் ஆலயத்திலும் திருப்பலி நிறைவேற்றப்படும்

பிரிவால் துயருறும்

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.**

---

## விண்ணக வாழ்வின்
## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்ந்தது : 08-12-1939



உதிர்ந்தது: 23-11-2021

### *திரு.G. M.* பயஸ் மிராண்டா

உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் (யோவா 11:25)

**திருப்பலி:** இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 23-11-2022 புதன் அன்று காலை 6.00 மணிக்கு புதுவை, தட்டாஞ்சாவடி புனித பாத்திமா அன்னை ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

இவரது பிரிவால் துயருறும்

**மகன், மருமகள், பேரன், உறவினர்கள் மற்றும் நண்பர்கள்.**

---


மிஷன் அச்சக
புதிய புத்தக
வெளியீடு

# உத்தரிக்கும் ஆன்மாக்களோடு எனது அனுபவங்கள்

**-மரிய சிம்மா**

தமிழாக்கம்:

**அருட்பணி அ. ஆரோக்கியராஜ்,**
முதல்வர்,
புனித அடைக்கல அன்னை மேல்நிலைப் பள்ளி, விரியூர்.

**விலை ரூ. 100**

தபால் செலவு தனி

மிஷன் அச்சகம்
196, மாதா கோவில் வீதி,
புதுச்சேரி - 605 001.


---

## விண்ணக வாழ்வின்
## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 01-11-1932



மறைவு: 23-11-2021

### *திரு.M.J.* அந்தோணி ராயப்பா

*துணிவுடன் இருங்கள், நான் உலகின்மீது வெற்றிகொண்டு விட்டேன் – யோவா.16:33*

**திருப்பலி:** இவரது ஆன்ம இளைப் பாற்றிக்காக, 23-11-2022 புதன் காலை 6.00 மணிக்கு நெல்லித்தோப்பு புனித விண்ணரசி அன்னை ஆலயத்திலும், காலை 6.30 மணிக்கு சென்னை அயனாவரம், புனித தொன் போஸ்கோ ஆலயத்திலும் திருப்பலிகள் நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்

**குடும்பத்தினர்.**

---

## விண்ணக வாழ்வின்
## 42-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 19-02-1938



மறைவு: 27-11-1980

### திரு. சத்தியநாதன் அல்போன்ஸ்மரி லெகோரி

*ஆண்டவரின் பேரன்பு முடிவுறவில்லை, அவரது இரக்கம் தீர்ந்துபோகவில்லை – புல.3:22*

**திருப்பலி:** காரைக்கால் புனித தேற்றரவு அன்னை ஆலயத்தில் 27-11-2022 ஞாயிறு காலை 6.30 மணிக்கு கூட்டுத் திருப்பலி அவர்களின் ஆன்மா சாந்தியடைய நிறைவேற்றப்படும். இதை கண்ணுறுவோர் அனைவரும் அவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளவும், நன்றி.

**பிரிவால் துயருறும்**
**மனைவி: S. ஜூலியட்**
மகன்: Bernard (France)
மகள்: Brigitte (France) மகன்: Benjamin (France)
காரைக்கால்.



தோற்றம் : 29-12-1935

மறைவு : 25-11-2017

# விண்ணக வாழ்வின் 5-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

இரக்கம் நிறைந்த இயேசுவே! எங்கள்
குடும்பத்தின் ஒளி விளக்காய்
எங்கள் அனைவரையும் அன்பு செய்து,
அரவணைத்து வாழ்வுக்கு நல்வழிகாட்டிய
எங்கள் அன்பு தந்தை திரு. **L. தாமஸ்**
அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியை
தந்தருளும். முடிவில்லாத உம் கருணையின்
ஒளி அவர்மேல் ஒளிர்வதாக. ஆமென்.

**திருப்ப- :** அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 25-11-2022, வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு வில்-யனூர், புனித லூர்து அன்னை திருத்தலத்தில் திருப்ப-நிறைவேற்றப்படும். அவருக்காக அனைவரும் செபிக்கும்படி வேண்டுகிறோம்.

## திரு. L. THOMAS

(Sub-Registror, Rtd.)

*"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாக நிகழ்வாய்" - (எசா 62:3)*

பிரிவால் துயருறும்
**மனைவி, மகன்-மருமகள்,**
**மருமகன்கள் - மகள்கள்,**
**பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள்**
**மற்றும் உற்றார் - உறவினர்கள்.**
வில்லியனூர் - புதுவை.



BIRTH : 19-08-1954

PRIESTLY ORDINATION : 12-05-1983

# மறுவுலக வாழ்வின் 2-ஆம் ஆண்டு நினைவு

*"Think upon me, my God, for good, according to all that I have done for this people" - (Nehemiah 5:19)*

The K.P Rathinam - Meline Lourdumary family of Kattu Kunankurichy fondly remembers **Fr. R.SUSAI REGIS** on the second anniversary of his Passover. May God be his Peace and Rest. We siblings remember our elder brother as a **S**ilent, **U**niting, **S**erving, **A**nointing, **I**nward-awakening, **R**emarkable, **E**difying, **G**entle, **I**nclusive, and **S**incere priest.

## Rev. Fr.R.SUSAI REGIS

Diocese of Vellore

Death : 24-11-2020

தம்பிகள், தங்கைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
காட்டுக்கூனன்குறிச்சி
R. **ஜெரார்டின்,** Rev.Fr.R. **அந்தோணி சேவியர்**
மரியின் ஊழியர் சபை
R. **ஜார்ஜ் தாமஸ் -** R. **செல்வி**
R. **அருள்மேரி ஸ்டெல்லா -** R. **செல்வராஜ்**
R. **எட்வர்ட் பிரான்சிஸ் -** A. **புளோரா**
R. **விக்டோரியா ஜெயசீ- -** A. **ஜோசப் பெ-க்ஸ்**
R. **பவு-ன் வேளாங்கண்ணி -** A. **ஜான் பீட்டர்**

# 45 ஆம் ஆண்டு நினைவு



தோற்றம்
**19-09-1908**

மறைவு
**24-11-1977**

## Divianadin ARLANDA

"ஆண்டவர் தம் ஊழியரின் உயிரை மீட்கின்றார்.
அவரிடம் அடைக்கலம் புகும் எவரும் தண்டனை அடையார்." - திபா 34:22

**செபம்**

விண்ணக தந்தையே இறைவா! உமது அன்பு மகன் எங்கள் குடும்பத்தின் நேசமுள்ள தலைவராக வாழ்ந்து உம் திருப்பாதம் அடைந்த உம் அடியார்

**Divianadin ARLANDA**

அவர்களுக்கு முடிவில்லாத விண்ணக வாழ்வை அளித்தருளும். உம் அருளும், நித்திய ஒளியும் என்றும் அவர்மீது ஒளிர்வதாக –ஆமென்.

– 1கர்.மங்.திரி

**நினைவு திருப்பலி**

24-11-2022 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு புதுவை, புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்திலும், மாலை 6.00 மணிக்கு திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவிலும் திருப்பலிகள் நிறைவேற்றப்படும்.

உங்கள் செபத்தை எதிர்நோக்கும்
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**கொள்ளுப்பேரப்பிள்ளைகள்,**
**மற்றும் குடும்பத்தினர்.**



# தீரத் தியாகி

**(புனித தேவசகாயம் வரலாறு)**

**(வெளியீடு: நெய்தல்வெளி , நாகர்கோவில்)**

- Dr. **தீபக் தாமஸ்,** பல் மருத்துவர், புதுவை.



சிங்காரம் என்றொரு
சூழ்ச்சி மிக்க
அரசு அதிகாரி.
ஒரு நாள்
தேவசகாயத்தை
சந்தித்தார்.

தேவசகாயம்
கிறிஸ்துவத்திற்கு மாறியது கண்டு
கடும் கோபம் கொண்டார்.
பொல்லாத மனிதர் அவர்.
பிள்ளையின் வளர்ச்சி மீது
பொறாமை பெரிதும் கொண்டவர்.

தாங்க முடியா கோபத்தோடு அவர்
தளவாய் இராமையனிடம் சென்றார்.



"கேட்பீரோ இந்த அக்கிரமத்தை!
தேவசகாயம் மதம் மாறி விட்டான்.
யாரோ இயேசு பிரானாம்
அவர் பக்கம் சாய்ந்து விட்டான்.
நம் மதத்தை தூற்றிவிட்டான்.
நம் தேவதைகள் இழிவானதாம்.
நாக்கில் நரம்பின்றி உரைத்து விட்டான்.
"தளவாயிடம் சொல்வேன்" என்றதற்கு
"அவன் யாரடா" என்று ஏசிவிட்டான்.
என இல்லாதது பொல்லாததுமாய்
தளவாயிடம் சொல்- விட்டார்.

தளவாய் தன் மதம் மீது
தீவிர பற்று கொண்டவர்.
தேவசகாயத்தின்
மனம் திரும்புதல் மீது
மட்டற்ற கோபம் கொண்டார்.

"அழைத்து வா அவனை"
என ஆத்திரமுடன் கட்டளையிட்டார்.

விசயம் அறியா தேவசகாயமும்
வெகுளியாய் அவர் முன் சென்றார்.

"என்ன நண்பரே அழைத்தீரோ"
என ஆவலுடன் கேட்டார் பிள்ளை.

"நண்பரே என்று விளிக்காதேயும்.
இழிவானவர்கள் எனக்கு நண்பர்களில்லை"
கோபத்துடன் கூறினார் தளவாய்.

"நான் எப்போது இழிந்தவனானேன்?"
ஏதுமறியாமல் கேட்டார் பிள்ளை.

"கிறித்தவ மதமென்பது வேறென்ன
கீழ்சாதி மதம் தானே?
இழிந்த மதத்தில் இணைந்தவன்
இழிவானவன் தானே?"
எரிச்சலுடன் கேட்டார் தளவாய்.

"இழிந்த மதமல்ல.
எல்லோருக்குமான மதம்.
இயேசுபிரானின் மதம்.
எனக்கு பிடித்த மதத்தை
நான் பின்பற்றுகிறேன்.
இதில் என்ன ஐயா தவறு?"
பொறுமையுடன் சொன்னார் பிள்ளை.

"தவறிழைத்தது மட்டுமன்றி
எடுத்தெறிந்து வேறு பேசுகிறாயா?
உன்னை என்ன செய்வது
என எனக்குத் தெரியும்.
முத-ல் இங்கிருந்து போ"
கடுஞ்சினத்துடன் கத்தினார் தளவாய்.
அறியாபிள்ளையாய்
அங்கிருந்து நகர்ந்தார் பிள்ளை.

தளவாய் மட்டுமல்ல
மதவெறி பிடித்த
மனிதர் பலரும்
தேவசகாயம் பிள்ளை
மதம் மாறியது கண்டு
மட்டற்ற கோபத்தில்
இருந்தனர்.

தேவசகாயத்தின்
தகப்பனாரும்
பிள்ளையின் செயலால்
காளி கோபமுறுவாள்
என் பெரிதும் அஞ்சி
பூசை ஒன்றிற்கு
மருதங்குளங்கரை இல்லத்தில்
ஏற்பாடு செய்திருந்தார்.

தொடரும்

**Published and Printed by Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. FRANCIS KALIST,**
Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Very Rev. Msgr. A. Arulanandam. Manager : Very Rev. Msgr. A. Arulanandam.